1987 ஏப்ரல் 10]

கோரிக்கை எண்: 32—பின் தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்

திரு. சோ. மா. இராமசசந்திரன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப்பெற்றது.

திருவாளர்கள் எ. எஸ். ஏ. ஆறுமுகம், பொ. உத்திராபதி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண்: 32—பின் தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 13,62,33,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (11—4—1987) காலை 10.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.05 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

72. 1984-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொலைக் காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 9—7—1986 ஆம் நாளிட்ட 1743 ஆம் எண் அரசாணையில் வெளி

[1987 ஏப்ரல் 10

யிடப்பட்ட அறிவிக்கை. (1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொலைக் காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/1984) 22 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

73. 1985-86-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மூன்றாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

142. கோரிக்கை எண் 21—மீனளம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (தமிழ், ஆங்கிலம்).

143. மீன்வளத்துறையின் செயல்வினை முறைத் திட்டம், 1987-88. (ஆங்கிலம்).

144. கோரிக்கை எண். 32—பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (தமிழ், ஆங்கிலம்).

145. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் செயல்வினை முறைத் திட்டம், 1987-88. (ஆங்கிலம்).

146. 1976-77-ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்கு களின் மீதும் அவ்வாண்டிற்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கையின் மீதும் பொதுக் கணக்குக் குழு (1980-82) அளித்த பதினாறாவது அறிக்கை (ஏழாவது பேரவை) யில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்தொன்றாவது அறிக்கை.

147. 1973-74-ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கை மீது பொதுக் கணக்குக் குழு